**<u>உதவி அமர்வு நீதிமன்றம் / சார்பு நீதிமன்றம், துறையூர்.</u>**
**முன்னிலை.திரு.C.விஜய்கார்த்திக்,M.A.,M.L.,**
**உதவி அமர்வு நீதிபதி / சார்பு நீதிபதி,**
**<u>துறையூர்.</u>**

## <u>SC.No.139/2023</u>

2025ம் ஆண்டு செப்டம்பர் திங்கள் 04ம் நாள் சாட்சியாகிய <u>அ.சா.11</u> வது நபரின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு 54வது விதியின் 9வது பிரிவின் ஏற்பாட்டின் படி திரு.S.கிருஷ்ணன், இருக்கை எழுத்தர் நிலை-2 என்பவரால் ஆணையுறுதி பிரமாணம் செய்யப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | செந்தில்குமார் | த/பெ | : | |
| | | | க/பெ | : | |
| வயது | : | | ஊர் | : | |
| தொழில் | : | | அலைபேசி எண் | : | |
| தேதி | : | 04.09.2025 | முகவரி | : | |

**<u>எதிரி ஆஜர்.</u>**
**<u>சாட்சி சத்திய பிரமாணம் செய்யப்பட்டு முதல்விசாரணை:</u>**

1. நான் தற்போது மண்ணச்சநல்லூரில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 05.07.2022ம் தேதி துறையூர் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தபோது உப்பிலியபுரம் காவல் நிலைய உதவி ஆய்வாளர் திரு.பிரகாஷ் அவர்கள் பதிவு செய்த நிலைய குற்ற எண்.175/2022 சட்டப்பிரிவுகள் 341, 294b, 323,326, 307 இதச வின்படியான முதல் தகவல் அறிக்கையை எனது விசாரணைக்கு எடுத்துக்கொண்டேன். அன்றைய தினம் காலை 07.00மணிக்கு சம்பவ இடம் சென்று சாட்சிகள் துரைசாமி, சீனிவாசன் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்தேன். பார்வை

மகஜர் **அ.த.சா.ஆ.9**. மாதிரி வரைபடம் **அ.த.சா.ஆ.10**. பின்னர் சாட்சிகள் செல்லதுரை, சரவணன், தமிழ்பாண்டியன், செல்லமுத்து, துரைசாமி, சீனிவாசன் ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் காலை 08.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு சென்று ரத்தம் படிந்த கருங்கல் ஒன்றை சாட்சிகள் துரைசாமி, சீனிவாசன் ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.11**. பின்னர் சாட்சி ராதிகாவை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் எதிரியை தேடி சென்று காலை 10.30 மணிக்கு டாப்செங்காட்டுப்பட்டி பேருந்துநிலையம் அருகே வைத்து எதிரி மாணிக்கத்தை காரணம் கூறி கைது செய்தேன். பின்னர் அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை சாட்சிகள் பன்னீர் செல்வம், சதீஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் பதிவு செய்தேன். பின்னர் அதில் அனுமதிக்கப்பட்ட பகுதியான என்னை அழைத்து சென்றால் நான் ராதிகாவை வெட்டிய சம்பவ இடத்தை அடையாளம் காட்டுகிறேன், மேலும் நான் ராதிகாவை வெட்ட பயன்படுத்திய கொடுவாலை மறைத்து வைத்துள்ள இடத்தை அடையாளம் காட்டி எடுத்து ஆஜர் செய்கிறேன். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.12**.

2. பின்னர் 12.15 மணிக்கு பெரிய சித்தூரில் உள்ள சாமி தொம்பை அறையின் பின்புறம் உள்ள புதரில் இருந்து எதிரி எடுத்து ஆஜர் செய்த கைப்பிடியுடன் கூடிய அருவாள் ஒன்று, மொத்த நீளம் 47 செ.மீ. மரக்கைப்பிடி நீளம் 18 செ.மீ. இரும்பு பூண் 5 செ.மீ. இரும்பு பகுதி 24 செ.மீ. உள்ளதை சாட்சிகள் பன்னீர்செல்வம், சதீஸ்வரன் ஆகியோர்கள் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜரில் கைப்பற்றினேன். கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.13**. பின்னர் எதிரி மற்றும்வழக்கு சொத்துடன் நிலையம் வந்து எதிரியை தக்க வழி காவல் மூலம் நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன். பின்னர் 05.08.2022 ம் தேதி இவ்வழக்கில் காயம் பெற்ற நபருக்கு

சிகிச்சை அளித்த திருச்சி அட்லஸ் மருத்துவமனை மருத்துவர் திரு.சுப்ரமணியன் அவர்களை விசாரித்து காயச்சான்று பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். பின்னர் வழக்கின் சொத்துக்களை படிவம் 91 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். படிவம் 91 **அ.த.சா.ஆ.14** மற்றும் **அ.த.சா.ஆ.15**. பின்னர் 15.08.2022ம் தேதி உதவி ஆய்வாளர் பிரகாஷ் அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவுசெய்தேன். அன்றைய தினமே வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரி மாணிக்கத்திற்கு எதிராக இதச பிரிவுகள் 341, 294b, 323, 326, 307ன்படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன். வழக்கில் கைப்பற்றப்பட்ட அருவாள் **அ.த.சா.பொ.1**. ரத்தம் படிந்த கருங்கல் **அ.த.சா.பொ.2**.

**குறுக்கு விசாரணை**

1. உப்பிலியபுரம் உதவி ஆய்வாளர் 05.07.2022ல் தகவல் கொடுத்தார் என்றால் சரிதான். தகவல் கொடுத்த நேரம் சுமார் காலை 05.00மணி ஆகும். உதவி ஆய்வாளர் காயம் பெற்ற நபரிடம் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை இரவு 08.00மணிக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் சரிதான். அன்றைய தினமே உயர் அதிகாரிகளுக்கு தகவல் தெரிவிக்கப்பட்டு அதன் அடிப்படையில் முதல் தகவல்அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக கூறியுள்ளது பொய் என்றால் அது பற்றி தெரியாது. சம்பவ இடத்தை உதவி ஆய்வாளர் அடையாளம் காட்டினார். சம்பவ இடத்தில் ரத்த படிந்த கருங்கற்களும், ரத்த மாதிரிகளும் உள்ளது என பார்வை மகஜரில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். ரத்தம் படிந்த கற்களில் சான்று பொருள் 2ம் ஒரு கல் என்றால் சரிதான். மீதமுள்ள கருங்கற்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் அவை சிறிய கற்கள். ரத்த மாதிரிகளை ஆய்வுக்குட்படுத்தி அதன் அறிக்கையை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. சம்பவ இட ரத்த மாதிரியும், ராதிகாவின் ரத்த மாதிரியையும்

ஒப்பிட்டு அறிக்கை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. மாதிரி வரைபடம் நான் தான் தயார் செய்தேன். பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீடுகள் சம்பவ இடத்தில் நான் குறிப்பிட்டுள்ளவாறு உள்ளது என்றால் சரிதான். மாதிரி வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ள வீடுகளில் உள்ளவர்களை விசாரித்தேனா என்றால் சரவணனை விசாரித்துள்ளேன்.

2. சரவணன் என்பவர் எதிரியின் மகன் என்றால் சரிதான். எதிரியின் மகனை தவிர சம்பவ இடத்தில் மற்ற தனிப்பட்ட சாட்சிகளை விசாரிக்கவில்லை என்றால் தமிழ்பாண்டியன், செல்லமுத்து என்பவரை விசாரித்துள்ளேன். சம்பவ இடத்திற்கு அருகில் உள்ள வீட்டில் இருக்கும் சுப்ரமணி என்பவரை விசாரித்தேனா என்றால் இல்லை. எதிரியின் மகன் சரவணன் என்பவருக்கும், எதிரிக்கும் சொத்து பிரச்சினை சம்மந்தமாக விரோதம் இருந்ததால் சரவணனை மட்டும் விசாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையாக நான் வழக்கில் தெரிவித்துள்ளது போல் சம்பவம் நடைபெற்றிருந்தால் சம்பவ இட சாட்சிகளை விசாரித்திருப்பேன் என்றால் சரியல்ல. அ.சா.2 செல்லதுரை என்பவரை எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் சம்பவ இடத்தில் 05.07.2022ம் தேதி விசாரித்தேன். சாட்சிகளின் வாக்குமூலங்கள் தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். யார் தட்டச்சு செய்தார்கள் என்றால் நிலைய கணிணி தட்டச்சர் தட்டச்சு செய்தார். அவரை விசாரித்து வாக்குமூலம் தனியாக பதிவு செய்தேன். வாக்குமூலங்கள் என்னிடம் சொல்லப்பட்டு நான் சொல்லி தட்டச்சு செய்யப்பட்டதா என்றால் சாட்சிகளை விசாரிக்கும்போது தட்டச்சர் என்னுடன் இருந்து தட்டச்சு செய்தார். என்னுடைய மேற்பார்வையில் தான் தட்டச்சு செய்யப்பட்டது. சாட்சிகள் 1,2 வாக்குமூலங்கள் ஒரே மாதிரி உறவு முறை கூறி தட்டச்சு செய்யப்பட்டுள்ளது என்றால் தட்டச்சு பிழையாகும். சாட்சி 3 சரவணன் என்பவரை சம்பவ இடத்தில் 05.07.2022ல் சுமார் 08.00மணியளவில் விசாரித்தேன். சரவணனை விசாரிக்கும்போது சம்பவம் நடந்த பிறகு செங்காட்டுப்பட்டி

அரசுமருத்துவமனைக்கு ராதிகாவை அழைத்து சென்றதாக கூறினாரா என்றால் இல்லை. சம்பவம் நடந்த பிறகு அ.சா.1 ஐ அ.சா.2,3 சேர்ந்து டாப்செங்காட்டுப்பட்டி அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் சரவணன் சென்றதாக ஆவணத்தில் இல்லை. சம்பவ இடத்தில் அ.சா.3 சரவணன் இல்லை என்றால் சரியல்ல.

3. ஒப்புதல் வாக்குமூலம் எந்த தேதியில் எத்தனை மணிக்கு வாங்கினேன் என்றால் 05.07.2022 ம் தேதி காலை 11.00-12.00 மணியளவில் வாங்கினேன். ஒப்புதல் வாக்குமூல சாட்சிகளுக்கு எத்தனை மணிக்கு தகவல் கூறினேன் என்றால் 10.30 மணிக்கு கூறினேன். எதிரியை கைது செய்த பிறகு தான் ஒப்புதல் வாக்குமூலம் வாங்கினேன். ஒப்புதல் வாக்குமூலம் வாங்கும்போது எதிரி என்னுடைய நேரடி கட்டுப்பாட்டில் இருந்தார் என்றால் சரிதான். ஒப்புதல் வாக்குமூலம் நான் சொல்லும் இடத்தில் வாங்கப்படவில்லை என்றால் சரியல்ல. காயம்பட்ட ராதிகா என்பவரை 05.07.2022 மாலை விசாரித்தேன். நேரம் ஞாபகம் இல்லை. திருச்சி மருத்துவமனையில் விசாரித்தேன். விசாரிக்கும்போது காயங்களை பார்த்தேனா என்றால் காலில் கட்டுப்போடப்பட்டிருந்த காயத்தை பார்த்தேன். நான் மருத்துவமனைக்கு சென்றபோது ராதிகாவுக்கு அறுவை சிகிச்சை முடிந்ததா இல்லையா என்றால் ஞாபகம் இல்லை. காயம்பெற்ற நபருக்கு அறுவை சிகிச்சை செய்த மருத்துவரிடம் சிகிச்சை சான்று பெற்று நீதிமன்றத்தில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. ராதிகாவுக்கு காயத்தால் உயிருக்கு ஆபத்து ஏற்பட வாய்ப்புள்ளதா என்பது குறித்து அறுவை சிகிச்சை செய்த மருத்துவரை விசாரித்தால் தான் தெரியும் என்றால் காயச்சான்றிதழ் வழங்கிய மருத்துவரை விசாரித்தாலும் தெரியும். அவர் எதுவும் காயச்சான்றிதழில் உயிரிழப்பு ஏற்படக்கூடிய காயம் என அறிக்கை கொடுக்கவில்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் கருங்கல் எடுக்கும்போது உதவி ஆய்வாளர் உடன் இருந்தாரா என்றால் ஆமாம். சாட்சிகளை விசாரிக்கும்போது உதவி ஆய்வாளர் உடன் இருந்தாரா என்றால் இல்லை. அறுவை சிகிச்சை செய்த மருத்துவரை விசாரித்தால்

தான் காயத்தின் தன்மை தெரியும் என்றால் சரியல்ல. அருவாளில் எதிரியின் கைரேகை இருந்ததா என ஆய்வு செய்யவில்லை என்றால் சரிதான். அருவாளின் நீளம் நான் தான் அளந்தேன். ராதிகா எதிரியின் மீது உள்ள முன்விரோதம், அவரது கணவருக்கு பாகத்தை கம்மியாக கொடுத்ததால் உள்ளது என்றால் இல்லை. அதனால் தான் சரவணன் என்பவரை மட்டும் சாட்சியாக விசாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இவ்வழக்கிற்கும்  சம்மந்தமில்லை எனவும், முன்விரோதத்தால் கொடுத்தா புகாரை சரிவர விசாரிக்காமல் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

/ உண்மை நகல்/

(ஓம்/-C.விஜய்கார்த்திக்)
சார்பு நீதிபதி,
துறையூர்.